

# பயணம்

இதழ்- 11 ஜூலை-2018

*ஸ்ரீ அண்ணன் சுவாமிகளிடம் சமர்ப்பிக்கப்படுகிறது--இறை நாட்டம் கொண்ட அன்பர்களுக்காக.....

www.sriannanswamigal.com

www.sriannanswamigalmobile.in

'Sri Annan Swamigal' in Google Play Store

இறைவனை நாடுபவர்கள்,பெரும்பாலும் தனது ஆரம்ப நாட்களில் பல குழப்பங்களுக்கு ஆளாகின்றனர். தூசி படிந்த அறையை சுத்தம் செய்ய முற்படும்போது பெரும் புழுதி கிளம்பி முன்பிருந்த வெளிச்சத்தையும் மறைப்பது போல ,ஆத்ம சாதகனுக்கு தற்காலிக இருளும், மயக்கமும் ஏற்படுகிறது. அப்போதெல்லாம் அவனுக்கு துணை, குருவின் அரவணைப்பு மட்டுமே. குருவருளும், இறையருளும் யாருக்கு கிடைக்கின்றதோ.. அவர் பேறு பெற்றவர். அவ்வாறு அருள் கிடைக்க ஒரு சாதகன் தன்னை தயார் படுத்திக்கொள்வது மிகவும் அவசியம். இறைவனே எல்லாம் செய்வான் எனக்கு, என தமோ குண தாக்கத்தில் ஒருவன் உறங்கிகொண்டிருந்தால், மேலும் மயக்கத்தில் ஆழ்ந்து போவான். எனவே தேடலின் தீவிரம், சரணாகதியின் அவசியம்,இறைவன் நம்மை ஆட்கொள்ளும் விதம்,குருவின் அவசியம், குருவின் மகிமை, குருவின் அருள் இவற்றை பற்றி நன்றாக உணர்ந்து தெளிந்த மஹாத்மாக்களின் அனுபவங்களை இங்கு நாம் தருகிறோம்.இவை ஆத்ம சாதகர்களுக்கு, இறைஞான தரிசனம் என்ற பயணத்தில் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

---இணைய நிர்வாகிகள்

# உள்ளே


| படைப்புக்கள் | பக்கம் எண் |
| --- | --- |
| உலகப்பற்று | 04-07 |
| கிராமத்து முதுமொழிகள் | 08-15 |
| ஆழ்மனதும் நம் மகிழ்ச்சியும் | 16-19 |

# உலகப்பற்று



**தென்கச்சி .கோ.சுவாமிநாதன்**

ஒரு கோயில் வாசலில் உள்ள பெட்டிக்கடையில்,பக்திப் பழமாக உட்கார்ந்திருப்பார் ஒருவர். அவர், 'எனக்கு ஆசையே இல்லை. பந்தங்களில் இருந்து விடுபட நினைக்கிறேன். இன்னும் அதற்கான வேளை வரவில்லை!' என்றபடியே இருப்பார். ஒருநாள் அந்த கோயிலுக்கு ஒரு சன்னியாசி வந்தார். கோயிலுக்கு வந்த அந்த சந்நியாசியிடமும் இதையே சொல்லிப் புலம்பினார் அந்த ஆசாமி. இதைக் கேட்டதும், ''நீ சரின்னு சொன்னா இப்பவே உன்னை அழைச்சிக்கிட்டுப் போயிடுறேன். என்ன சொல்றே?'' - கேட்டார்

சந்நியாசி. ''நானும் இதைத்தான் நினைச்சேன். ஆனா, வீட்ல விவரம் தெரியாத வயசுல புள்ளைங்க இருக்கறப்ப, எப்படி விட்டுட்டுப் போறதுன்னுதான் ஒரு யோசனை. அவங்களுக்கு கல்யாணம் காட்சின்னு ஆயிட்டா... அப்புறம் நிம்மதியா கிளம்பிடலாம்!'' என்றார் ஆசாமி. சிரித்தபடியே கிளம்பிச் சென்றார் சந்நியாசி. ஆண்டுகள் ஓடின! . ஒருநாள்... கோயிலுக்கு மறுபடியும் வந்தார் சந்நியாசி! அதே சந்நியாசி; அதே பெட்டிக்கடை; அதே ஆசாமி! ''எனக்கு ஆசையே இல்லை. பந்தங்களிலிருந்து விடுபட விரும்பறேன். ஆனா, இன்னும் அதற்கான வேளை வரலை'' - அதே புலம்பல். சந்நியாசி மெள்ள புன்னகைத்தபடி, ''சரி... நீ இப்பவாவது என்னோடு புறப்படேன்!'' என்றார். ''பிள்ளைங்களுக்கு கல்யாணம் பண்ணி வச்சுட்டேன். பேரப் பிள்ளைங்களையும் கண்ணாலே பார்த்துட்டா. என் கவலையெல்லாம் தீர்ந்துடும்!'' என்று விவரித்தார் நம்ம ஆள்!

சில ஆண்டுகளுக்குப் பிறகு, சந்நியாசி வந்தார்.''எனக்கு ஆசையே இல்லை...''- வழக்கம்போல் கேட்டது குரல்! ''இப்போதாவது வருகிறாயா?''- இது சந்நியாசி. ''கோர்ட்ல கேஸ்

இருக்கு. வழக்கு முடிஞ்சிட்டா வந்துடலாம்''-பதிலுரைத்தார் ஆசாமி. வழக்கமான புன்னகையுடன் கிளம்பினார் சந்நியாசி. ஆண்டுகள் பல கழிந்தன. மீண்டும் வந்தார் சந்நியாசி. ஆனால், அந்த ஆசாமியைக் காணோம். கடையில் இருந்தவரிடம் நம்மவர் குறித்து விசாரித்தார் சந்நியாசி. கடையில் இருந்தவர், ''சாமி... எங்க அப்பாதான் அவரு. 'எல்லா பந்தங்களையும் விட்டுட்டு உங்ககூட வந்துடணும்னு சொல்லிகிட்டே இருந்தாரு, போன வருஷம் ஒருநாள்... நெஞ்சு வலின்னு வர, பொட்டுனு போயிட்டாரு. அப்பா இந்நேரம் உயிரோட இருந்திருந்தா, நிச்சயம் உங்க கூட வந்துருப்பாரு சாமீ...''- கவலையுடன் சொன்னார் நம்மவரின் மகன். இதைக் கேட்ட சந்நியாசி, ''உங்க அப்பன் எங்கேயும் போயிடலே. இங்கதான் இருக்கான். அதோ... அங்கே பார்... அதென்ன?'' ,''அது நாய்... இங்கேதான் சுத்திக்கிட்டிருக்கு!''''அதான் உங்க அப்பன். இப்ப பாரு'' என்றவர், கையைத் தட்டினார்.

அந்த நாய் வாலாட்டியபடியே ஓடி வந்தது. நாயின் தலையைத் தட்டினார். உடனே அது, ''எனக்கு ஆசையே இல்லே...'' என பேசத் துவங்கியது. ''அடேய்... என்னோட வந்துடறியா?'' -

சந்நியாசி கேட்டார். ''சாமி! ஏராளமா சொத்து சேத்து வச்சுட்டேன். பிள்ளைங்க அதை சரியா காப்பாத்துவாங்கன்னு தோணலீங்க. கடையை சரியா பூட்டாமே போயிடறாங்க. அதுதான் நாயா பிறந்து காவல் காத்துக்கிட்டு கிடக்கிறேன்!''- இப்படி நாய் சொன்னதும், 'கடகட'வெனச் சிரித்தார் சந்நியாசி.

பிறகு அவர் சொன்னார் ''அறியாமையில் சுகம் கண்டவர்களுக்கு ஆன்ம விடுதலை எப்படிக் கிடைக்கும்?''

இன்றைக்கு ஆலயங்களைத் தேடிப் போகிற அன்பர்கள், முதலில்... அறியாமை சுகத்திலிருந்து விடுபட வேண்டும்... பிறகு, ஆன்மிக சுகத்தை அடையாளம் காண வேண்டும்!ஞானம் என்பது நாளை நிகழ்வதல்ல. அது இங்கே இப்போது நிகழவேண்டிய ஒன்று.

**- தென்கச்சி .கோ.சுவாமிநாதன்**

# கிராமத்து முதுமொழிகள்

1. தங்கச் செருப்பானாலும் தலைக்கு ஏறாது.

2. தீயில் இட்ட நெய் திரும்ப வராது.

3. நாடு கடந்தாலும் நாய்க்குணம் போகாது.

4. தேரோடு போச்சுது திருநாள். தாயோடு போச்சுது பிறந்தகம்.

5. தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது.

6. செத்த பிணத்திற்கு அருகே இனி சாகும் பிணம்அழுகிறது.

7. சங்கு சுட்டாலும் வெண்மை தரும்.

8. கடலைத் தாண்ட ஆசையுண்டு, கால்வாயைத் தாண்ட கால் இல்லை.

9. கரும்பு கசப்பது வாய்க்குற்றம்.

10. கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான். மரம் ஏறிக் கை விட்டவனும் கெட்டான்.

11. காட்டிலே செத்தாலும் வீட்டிலே தான் தீட்டு.

12.கூப்பாட்டால் சாப்பாடாகுமா?

13. எரிகிற வீட்டை அவிக்க கிணறு வெட்ட நாள் பார்த்தது போல,கும்பிட்ட கோயில் தலை மேல் இடிந்து விழுந்தது போல,சில்லரைக் கடன் சீரழிக்கும்.

14. சொப்பனங்கண்ட அரிசி சோற்றுக்கு ஆகுமா?

15. உறவு போகாமல் கெட்டது, கடன் கேளாமல் கெட்டது. (எத்தனை பெரிய உண்மை. போய் வந்து கொண்டிருந்தால் தான் உறவு நிலைக்கும். கொடுத்த கடனைக் கேட்டுக் கொண்டே இருந்தால் தான் திரும்பக் கிடைக்கும்).

16. அடி நாக்கில் நஞ்சும், நுனி நாக்கில்

அமிர்தமுமா?
(இன்று பலரும் இப்படித்தானே இருக்கிறார்கள்?)

17. ஆனை இருந்து அரசாண்ட இடத்தில் பூனை இருந்து புலம்பி அழுகிறது! (எல்லாம் காலத்தின் கோலம்!)

18. அறப்படித்தவன் அங்காடிக்குப் போனால் விற்கவும் மாட்டான், வாங்கவும் மாட்டான். (அதிகமாய் படித்தவர்கள் பலரும் இப்படித்தான்).

19. உள்ள பிள்ளை உரலை நக்கிக் கொண்டிருக்க மற்றொரு பிள்ளைக்கு திருப்பதிக்கு நடக்கிறாள். (இருக்கிற குழந்தைக்கு சோறு போடாமல் அது உரலில் ஒட்டிக் கொண்டிருக்கும் தானியத்தை நக்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் அடுத்த பிள்ளை வேண்டும் என்று திருப்பதிக்கு வேண்டிக் கொண்டு நடக்கிறாளாம். இப்படியும் இருக்கிறார்கள்).

20. இறுகினால் களி. இளகினால் கூழ்.

21. ஊன்றக் கொடுத்த தடி மண்டையைப் பிளந்தது.(யாருக்கு உதவுகிறோம் என்று சிந்தித்து உதவா விட்டால் இப்படித்தான்)

22. எடுப்பது பிச்சை. ஏறுவது பல்லாக்கு. *(பலருடைய போக்கு இப்படித்தான் இருக்கிறது)*

23. எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?(எட்டி பழுத்தாலும் அதன் கசப்பால் சாப்பிட உதவாது. கஞ்சனுக்கு எத்தனை செல்வம் வந்தாலும் அதில் யாரும் பலன் அடைய முடியாது).

24. விசாரம் முற்றினால் வியாதி. (கவலை அதிகமானால் வியாதியில் தான் முடியும்).

25. பைய மென்றால் பனையையும் மெல்லலாம்.*(நிதானமாக சிறிது சிறிதாக மென்றால் பனையைக் கூட மென்று விடலாம். அதாவது நிதானமாக தொடர்ந்து*

*செய்து கொண்டே இருந்தால் எத்தனை பெரிய காரியத்தையும் செய்து முடித்து விடலாம்.)*

26. காற்றில்லாமல் தூசி பறக்காது. (நெருப்பில்லாமல் புகையாது என்ற பழமொழிக்கு இணையான இன்னொரு பழமொழி)

27. பண்ணின புண்ணியம் பலனில் தெரியும். (நாம் அனுபவிக்கும் பலன்களைப் பார்த்தாலே சேர்த்திருக்கும் புண்ணியம் எவ்வளவு என்பது தெரிந்துவிடும்).

28. பிடித்த கொம்பும் ஒடிந்தது, மிதித்த கொம்பும் முறிந்தது. (துரதிர்ஷ்டம் எப்படி எல்லாம் சோதிக்கிறது என்பதற்கு அழகான பழமொழி. ஒரு மரத்தில் ஏறி ஒரு கொம்பைப் பிடித்துக் கொள்ளும் போது அது ஒடிந்து போக, கீழே விழாமல் இருக்க இன்னொரு கொம்பில் காலை வைத்து ஊன்றினால் அந்தக் கொம்பும் முறிந்தால் எப்படி இருக்கும்?)

29. பாடுபட்டுக் குத்தினாலும் பதரில் அரிசி இருக்காது.

(பதர் என்பதே அரிசி இல்லாத நெல் தான். அதனால் என்ன தான் குத்தினாலும் அதில் அரிசி கிடைக்க வாய்ப்பில்லை. மனிதனின் பயனில்லாத முட்டாள்தனமான முயற்சி குறித்துச் சொல்லும் பழமொழி)

30. இட்டதெல்லாம் பயிராகாது. பெற்றதெல்லாம் பிள்ளையாகாது. (விதைத்ததெல்லாம் பயிராகி பலன் தருவதில்லை. அது போல பெற்றதெல்லாம் பிள்ளையாகி நல்லபடியாக நம்மைப் பார்த்துக் கொள்ளும் என்று நினைத்துவிட முடியாது).

31. கடைந்த மோரிலே குடைந்து வெண்ணைய் எடுப்பான்.(தயிரில் வெண்ணெய் எடுத்த பிறகு தான் மோராகிறது. அந்த மோரிலேயே மீண்டும் வெண்ணெய் எடுக்கும் அளவு சாமர்த்தியம் வாய்ந்தவர்களைப் பற்றி இந்தப்பழமொழி சொல்கிறது.

32. வாங்குகிற கை அலுக்காது. (வாங்கிக் கொண்டே இருப்பவர்களுக்கு அலுப்பே இருக்காது. லஞ்சம் வாங்கும் அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும்

என்றே சொல்லப்பட்ட பொருத்தமான பழமொழியோ?)

33. அடுத்த வீட்டுக்காரரே பாம்பைப் பிடியுங்க. அது அல்லித்தண்டு போல ஜில்லென்றிருக்கும்.
(என்ன சாமர்த்தியம் பாருங்கள்!)

34. உயிரோடு ஒரு முத்தம் தராதவள், செத்தால் உடன்கட்டை ஏறுவாளா?

35. அய்யாசாமிக்குக் கல்யாணம், அவரவர் வீட்டில் சாப்பாடு.

36. அவனே இவனே என்பதை விட சிவனே சிவனே என்பது நல்லது.

37. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறி.

38. ஆகிறவன் அரைக்காசிலும் ஆவான். ஆகாதவனுக்கு ஆயிரம் கொடுத்தாலும் விடியாது.

39. ஆயிரம் உடையான் அமர்ந்திருப்பான், அரைப்பணம் உடையான் ஆடி விழுவான்.

40. ஆனை மேல் போகிறவனை சுண்ணாம்பு கேட்டால் கிடைக்குமா?

41. இந்த எலும்பைக் கடிப்பானேன், சொந்தப்பல்லுப் போவானேன்?

42. இந்தக் கூழுக்கா இத்தனை திருநாமம்?

43. இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.

44. இடுகிறவள் தன்னவள்ஆனால் முதல் பந்தியில் உண்டால் என்ன, கடைப் பந்தியில் உண்டால் என்ன?

45. உண்டு கொழுத்த நண்டு வளையில் தங்காது.

- **திரு வெங்கடேசன், திருவாரூர்**

# ஆழ்மனதும் நம் மகிழ்ச்சியும்



**டாக்டர். ஜோசப் மர்பி**

(டாக்டர். ஜோசப் மர்பி அயர்லாந்தில் 1898 இல் பிறந்தார். கத்தோலிக்க சபையில் ஆர்வம் உள்ளவராக இருந்தவர். இந்தியா வந்து இங்குள்ள யோகிகள்,சித்தர்கள் இவர்களை சந்தித்து இந்திய தத்துவ சாத்திர வழிகளை கற்றார். அமெரிக்கா திரும்பி சென்று அங்கு ஒரு புது பரிமாணத்தில் தத்துவ போதனைகளை செய்து அதில் மிகப்பெரும் வெற்றியை மக்களுக்கு அளித்தார். நடைமுறை மனோ தத்துவத்தில் பெரும் பங்களிப்பை செய்தவர் இவர். பல நூல்களை எழுதியுள்ளார். அதில் ஒரு நூலான **The Power Of Your Subconscious Mind** என்பதின் ஒரு பகுதியின் தமிழாக்கம் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.)

அமெரிக்க மனோதத்துவத்தின் தந்தை என அழைக்கப்படும் திரு வில்லியம் ஜேம்ஸ் கூறுகிறார்," 19 ஆம் நூற்றாண்டின் மிகபெரிய கண்டுபிடிப்பு இயற்பியல் கோட்பாடுகள் அல்ல. நம்பிக்கையுடன் சேர்ந்த ஆழ்மனதின் அளப்பறிய சக்தியை நாம் கண்டுகொண்டதுதான்" என்கிறார்.

ஒவ்வொரு உயிரிலும் உள்ள இந்த அளவிடமுடியாத ஆழ்மனசக்தி உலகின் எந்த பிரச்சனையையும் தீர்க்கும் வலிமையுடையதாக உள்ளது. என்று நாம் இந்த உண்மையை நம்ப துவங்குகிறோமோ அன்றுமுதல் நமக்கு உண்மையான நிரந்தரமான மகிழ்ச்சி கிடைக்க துவங்கும்.

உனக்கு குழந்தை பிறக்கும் போது, வேலை கிடைக்கும்போது, பணம் கிடைக்கும்போது மகிழ்ச்சி ஏற்படும்தான். ஆனால் அவை சிறு பொழுதுக்கு மட்டும்தான். மகிழ்ச்சி மாறிவிடும்.
ஆனால் நீ ஆழ்மனதின் சக்திக்கும் பேரறிவுக்கும் ஆதாரமான இறைசக்தியிடம் நம்பிக்கை வைத்து சரணடைந்தால் அந்த சக்தி உன்

ஆழ்மனதின்மூலம் உன்னை காத்து, அன்புகாட்டி, வழிநடத்தும். நீ அன்பு, அமைதி, நல்லெண்ணம் இவற்றை வெளிக்காட்டும்போதுதான் உனது தினசரி வாழ்வு மகிழ்ச்சியும் அமைதியும் நிரம்பியதாய் அமையும்.

சந்தோஷம் என்பது மனதின் ஒரு நிலை. இந்த நிலையை தேர்ந்தெடுக்க நாம் தயாராக முழுமனதுடன் இருக்க வேண்டும். முதலில் நாம் முழுமனதுடன் சந்தோஷமாக இருக்க முடிவு செய்யவேண்டும்.

காலையில் எழுந்தவுடன்," இறைசக்தியின் கருணை தினமும் எனது வாழ்க்கையை தாங்குகிறது. வழினடத்துகிறது, அனைத்தும் எனது நன்மைக்காக நடக்கின்றது. இந்த நாள் எனக்கு அருமையான தினமாக அமையும். இறைவனின் பேரருள் என்னை சூழ்ந்து,காத்து,ஆசீர்வதித்து நன்மையை தரும் என்று தெளிவாக சொல்லிக்கொண்டு எழ வேண்டும். எது சிறப்பானதாகவும் நல்லதாகவும் உள்ளதோ அவை அனைத்தும் என்னிடத்தில் இன்று வந்து சேரும். எனது முயற்சி இன்று

எனக்கு வெற்றியை தரும். இந்த நாள் ஒரு அற்புதமான நாளாக எனக்கு அமையப்போகிறது. நாள் முழுவதும் நான் மகிழ்ச்சியுடன் இருக்கபோகிறேன் என ஆழமாக சொல்லிக்கொண்டு அன்றைய தினத்தை தொடங்க வேண்டும்.

--**தொடரும்**




*இதழ் முற்றும்*